**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் மூன்று இல்லங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்–2016–17 ஆம் நிதியாண்டு– ரூ.32,66,400/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1டி) எண்.27

நாள்: 27–03–2017
துன்முகி, பங்குனி 14,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. அரசாணைண(1டி) எண்.24, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 01–03–2016.
2 அரசாணைண(1டி) எண்.28, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 03–03–2016
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2648/மா.தி.ந.2.1/16, நாள் 09.08.2015. (ம)07.11.2016

**ஆணை:**

-------

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான இல்லங்களை நடத்தும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களான 1) சி.எஸ்.ஐ. பாலர் ஞான இல்லம், அஸ்தம்பட்டி, சேலம், 2) புனித ஜோசப் சாரிட்டி ஹோம், அடைக்கலபுரம், தூத்துக்குடி, 3)புனித அன்னாள் கருணாலயா மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம், கண்டனி, சிவகங்கை மற்றும் 4)ஐ.இ.எல்.சி மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி மற்றும் மறுவாழ்வு இல்லம், பேரணாம்பட்டு, வேலூர் ஆகிய 4 தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு, 2013–14 ஆம் நிதியாண்டிற்கு நிலுவைத் தொகையான ரூ.23,57,452/–மும், மேலும் 2014–15 ஆம் நிதியாண்டிற்கு 1) சி.எஸ்.ஐ. பாலர் ஞான இல்லம், அஸ்தம்பட்டி, சேலம், 2) புனித ஜோசப் சாரிட்டி ஹோம், அடைக்கலபுரம், தூத்துக்குடி, 3)புனித அன்னாள் கருணாலயா மகளிர் இல்லம், (சுந்தரநடப்பு), சிவகங்கை ஆகிய இல்லங்களுக்கு ரூ.8,76,300/– வீதம் மூன்று இல்லங்களுக்கு ரூ.26,28,900/– மற்றும் 4)ஐ.இ.எல்.சி மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி மற்றும் மறுவாழ்வு இல்லம், பேரணாம்பட்டு, வேலூர் இல்லத்திற்கு ரூ.7,40,443/– ஆக மொத்தம் ரூ.33,69,343/– என ஆக மொத்தம் ரூ. 57,26,795/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2015–16 ஆம் ஆண்டில் 14 வயதுக்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கென தன்னார்வ தொண்டுகளால் நடத்தப்படும் நான்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு, ஒரு இல்லத்திற்கு ரூ.8,76,300/– வீதம் நான்கு இல்லங்களுக்கு ரூ.35,05,200/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2016–17 ஆம் நிதியாண்டிற்கு 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சியுடன் கூடிய

பெண்களுக்கான நான்கு இல்லங்களான 1) சி.எஸ்.ஐ. பாலர் ஞான இல்லம், சேலம், 2) புனித ஜோசப் சாரிட்டி ஹோம், அடைக்கலபுரம், தூத்துக்குடி, 3) புனித அன்னாள் கருணாலயா மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம், சிவகங்கை மற்றும் 4) பெத்தேல் மனவளர்ச்சி குன்றியோருக்கான மறுவாழ்வு இல்லம், வேலூர்தொடர் செலவினமாக ஒரு இல்லத்திற்கு ரூ.10,88,800/– வீதம் நான்கு இல்லங்களுக்கு ரூ.43,55,200/– ஒதுக்கீடு செய்து திட்டத் தொடராணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2016–17 ஆம் ஆண்டில் 14 வயதுக்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கென தன்னார்வ தொண்டுகளால் நடத்தப்படும் மூன்று தன்னார்வ தொண்டு நிறுவனங்களான 1) சி.எஸ்.ஐ. பாலர் ஞான இல்லம், சேலம், 2) புனித ஜோசப் சாரிட்டி ஹோம், அடைக்கலபுரம், தூத்துக்குடி மற்றும் 3) புனித அன்னாள் கருணாலயா மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம், சிவகங்கை ஆகியவற்றிற்கு ஒரு இல்லத்திற்கு ரூ.10,88,800/– வீதம் மூன்று இல்லங்களுக்கு மொத்தம் ரூ.32,66,400/– (ரூபாய் முப்பத்திரெண்டு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து நானூறு மட்டும்) கீழ்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு செய்தும் மேலும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | சமூக பணியாளர் / மேலாளர் / விடுதிக் காப்பாளர் / முதுநிலை பயிற்சியாளர் மதிப்பூதியம்<br>ரூ.6,000/– x 1 நபர் x 12மாதங்கள் | ரூ.72,000/– |
| 2. | காப்பாளர்<br>ரூ.5,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.60,000/– |
| 3. | சமையலர்<br>ரூ.3,000/– x 1 நபர் x 12மாதங்கள் | ரூ.36,000/– |
| 4. | உதவி சமையலர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 12மாதங்கள் | ரூ.24,000/– |
| 5. | இரவுக் காவலர்<br>ரூ.4,000/– x 1 நபர் x 12மாதங்கள் | ரூ.48,000/– |
| 6. | தொழிற் பயிற்றுநர்கள்<br>ரூ.6,000/– x 3 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.2,16,000/– |
| 7. | துப்புரவு பணியாளர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 12மாதங்கள் | ரூ.24,000/– |
| 8. | உணவூட்டுச் செலவினம்<br>ரூ.650/– ஒரு மாதத்திற்கு x 40 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.3,12,000/– |
| 9. | உடைகள் (வருடத்திற்கு 2 செட்)<br>ரூ.500/– x 40 நபர்கள் x 2 செட் | ரூ.40,000/– |
| 10. | வாடகை (ரூ.10,000/–)/ கட்டட பராமரிப்பு (சொந்த கட்டடம் எனில்) மற்றும் மின் கட்டணம்(ரூ.3,000/–)<br>ரூ.13,000/– x 12 மாதங்கள் | ரூ.1,56,000/– |
| 11. | தொலைபேசி மாதாந்திர கட்டணம்<br>ரூ.1,000/– x 12மாதங்கள் | ரூ.12,000/– |

| | | |
|---|---|---|
| 12. | மருந்துகள்<br>ரூ.1,500/– x 12 மாதங்கள் | ரூ.18,000/– |
| 13. | பாய்கள் மற்றும் தலையணைகள்<br>ரூ.200/– x 40 நபர்கள் | ரூ8,000/– |
| 14. | சோப்பு மற்றும் இதர பொருட்கள்<br>ரூ.50/– x 40 நபர்கள் | ரூ.2,000/– |
| 15. | சமையல் எரிவாயு ரூ.900/– x 12 மாதங்கள் | ரூ.10,800/– |
| 16. | தொழிற்பயிற்சி / மூலப் பொருட்கள் | ரூ.50,000/– |
| | மொத்தம் | ரூ.10,88,800/– |
| | 3 இல்லம் x ரூ.10,88,800/– | **ரூ.32,66,400/–** |

5. 2016–17 ஆம் ஆண்டுக்கான இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் போதிய நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2235– சமூகப் பாதுகாப்பும் நலனும் 02–சமூக நலன் 101– மாற்றுத் திறனாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது–CU மனவளர்ச்சி குன்றிய வயதான மகளிருக்காக மறுவாழ்வு இல்லங்களைத் தொடங்குதல்–09–உதவித் தொகை–03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை."
> (த.தொ.கு. 2235–02–101–CU–0934)

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.14461/நிதி(சந)/2017, நாள் 27.03.2017 ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.(மு.கூ.பொ)**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தூத்துக்குடி, சிவகங்கை, மற்றும் சேலம். (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18( பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
**நகல்:–**
நிதி (சமூக நலம்)த் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி .

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.